சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

**முன்னிலை: திரு.P.S. ரஸ்கின் ராஜ், B.A., L.L.B.,**

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் நாள் திங்கட்கிழமை

அசல் வழக்கு எண்.159/2025

***(CNR.No.TNMD240004382025)***

பாண்டியம்மாள் ... வாதி

/ எதிர் /

நாராணம்மாள் ... பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 09.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் அழைப்பாணை சார்வு செய்தும் ஆஜராகாத காரணத்தினால், அவர் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், வாதிதரப்பு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டும் இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ஒருதலைபட்ச...

## தீர்ப்புரை

பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டிய பிராதுத் தொகை ரூ.1,25,899யை செலுத்தவும், அசல் தொகை ரூ.1,00,000க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழக்கு முடியும் நாள் வரை 12 சதவீதம் வட்டி வீதம் செலுத்தக் கோரியும், வழக்கு செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :

பிரதிவாதி அவரது குடும்ப செலவிற்காகவும், சில்லறை கடன்களை தீர்ப்பதற்காகவும் வாதியிடம், கடந்த 26.07.2023ம் தேதியன்று ரூ.1,00,000 பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக புரோநோட் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி கடனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100க்கு ரூ.1 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். பிறகு வாதி பலமுறை கேட்டும் ஒப்புக்கொண்டபடி கடன் தொகையை செலுத்ததால் 23.06.2025ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், பிரதிவாதி தொடர்ந்து காலதாமதம் செய்து ஏமாற்றும் நோக்குடன் செயல்பட்டு வந்ததாலும், கடன் தொகையை பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடக்கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால் அவர் தோன்றாத்தரப்பினராக உத்தரவு

செய்யப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வ.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலிக்கும் போது வாதி தன்னுடைய வழக்கினை மெய்ப்பிப்பதற்காக 26.07.2023ம் தேதியிட்ட புரோநோட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். ஆனால் பிரதிவாதி தரப்பில் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதி இந்த வழக்கின் முழு விபரங்கள் தெரிந்தும் நீதிமன்றத்தில் முன்னிலையாகததால் வாதியின் வழக்கு விபரங்களை பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே பிரதிவாதிக்கு எதிரான இந்த வழக்கு வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. வாதியிடம் பெற்ற கடனை பிரதிவாதி திருப்பி செலுத்தக் கடமைப்பட்டவர். எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதி, வாதி கோரிய பிராதுத்தொகை ரூ.1,25,899/- ஐ வாதிக்கு செலுத்தவேண்டும் என்றும், மேற்படி அசல் தொகை ரூ.1,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை 9% வட்டியுடனும், தீர்ப்பு தேதியிலிருந்து மேற்படி அசல் தொகை ஈடாகும் வரை 6% வட்டியுடனும் வாதிக்கு செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.16 17:46:59 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**வாதி தரப்பு சாட்சி:**

வா.சா.1 பாண்டியம்மாள்

வா.சா.2 ஆனந்த்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.07.2023 | புரோநோட் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | | பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் |

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.16 17:47:06 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.